

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து சின்னக்காம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என். நேரு பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், நாகப்பட்டினம் மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன், பேரூர் கழக செயலாளர் பன்னீர்செல்வம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் – 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து கழக இளைஞர் அணிச் செயலாளர் எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

**இன்று : 27.09.2026**

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | மாலை 4.00 மணி | மதுராந்தகம் (வேன் பிரச்சாரம் ) |
| 2. | மாலை 5.00 மணி | அச்சிறுப்பாக்கம் (வேன் பிரச்சாரம்) |
| 3. | மாலை 6.00 மணி | ஓரத்தி (வேன் பிரச்சாரம்) |
| 4. | மாலை 7.00 மணி | கருங்குழி (வேன் பிரச்சாரம்) |
| 5. | இரவு 8.00 மணி | மாமண்டூர் (வேன் பிரச்சாரம்) |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 25.09.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.

# வங்கக்கடலில் உருவாகும் 3 புயல்கள்!

*சென்னை, செப்.27-*

இந்த ஆண்டு சூப்பர் எல் நினோ ஆண்டாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, எதிர்பார்க்க முடியாத, கணிக்க முடியாத வானிலை சூழல் உருவாகும் என்றும், குறிப்பாக வங்கக்கடலில் 3 புயல்கள் உருவாக வாய்ப்பு இருப்பதாகவும் தனியார் வானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

தமிழ்நாடு வெதர்மேன் பிரதீப் ஜான் குழுவினரால், இந்த ஆண்டு பருவமழை எப்படி இருக்கும் என்பது குறித்து Chennai Rains வெப்சைட்டில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

## பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லை — பெற்றோர் வேதனை!

# வண்டலூர் அருகே பயங்கரம் - 10ஆம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமை!

## த.வெ.க. அரசு மூடி மறைக்க முயற்சி! பொதுமக்கள் சாலை மறியல்!

*சென்னை, செப். 27 -*

வண்டலூர் அருகே கண்டிகை அரசுப் பள்ளியில் 10ஆம் வகுப்பு மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமையைக் கண்டித்து அரசுப் பள்ளியை முற்றுகையிட்டு பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. பாலியல் வன்கொடுமை வழக்கை மூடி மறைக்க காவல்துறை முயற்சிப்பதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் அருகே உள்ள கண்டிகையில் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இந்நிலையில், வழக்கம்போல் நேற்று மாணவ, மாணவிகள் தேர்வு எழுத வந்தனர். அப்போது நேற்று மதியம் மேலக்கோட்டையூரை சேர்ந்த 10ம் வகுப்பு மாணவி வயிற்று உபாதைக்காக பள்ளி வளாகத்தில் உள்ள கழிப்பிடத்திற்கு சென்றுள்ளார். அப்போது கஞ்சா போதையில் இருந்த 4 பேர் கொண்ட கும்பல், மாணவியை குண்டுக்கட்டாக ஏரிக்கரைக்கு தூக்கிச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதைக் கண்டித்து அரசுப் பள்ளியை முற்றுகையிட்டு பெற்றோர் மற்றும் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். த.வெ.க. ஆட்சியில் பள்ளி மாணவிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விட்டதாகவும், மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கை காவல்துறை மூடி மறைக்க முயற்சிப்பதாகவும் பாதிக்க ப்பட்ட மாணவியின் பெற்றோர் மற்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## தேர்தல் ஆணையத்தின்

# 14 நிர்வாக உத்தரவுகளை ரத்து செய்யக் கோரி மனு!

## மும்பை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்!

*கோலாப்பூர், செப். 27-*

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கடந்த 10 மாதங்களில் பிறப்பித்த 14 நிர்வாக உத்தரவுகளை ரத்து செய்யக் கோரி மும்பை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் மும்பை உயர் நீதிமன்றத்தின் கோலாப்பூர் அமர்வில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர். அதில், தேர்தல் ஆணையம் ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கவில்லை என்பது அம்பலமான நிலையில் கடந்த 10 மாதங்களாக எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் 14 நிர்வாக உத்தரவுகளை ரத்து செய்ய வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

மேலும், மகாராஷ்டிராவில் நடந்த SIR திருத்தத்தை ரத்து செய்துடன், நீக்கப்பட்ட பெயர்களை மீண்டும் சேர்க்க உத்தரவிட வேண்டும் என்றும் அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வாக்காளர்களின் பெயர்களை நீக்கியது, ரகசிய மென்பொருள் பயன்படுத்தியது உள்ளிட்ட விவகா ரங்கள் குறித்து ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் சுதந்திரமான விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்றும் படிவம் 6 ல் கொண்டுவரப்பட்ட மாற்றத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்:

# ஆதித்திராவிடர் நலக்குழு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி அறிவிப்பு!

*சென்னை, செப். 27-*

தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைந்த கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, மதுரை, திண்டுக்கல், கோவை, ஈரோடு, திருப்பூர், நாமக்கல், கரூர், நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என்று ஆதிதிராவிடர்நலகுழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

நடைபெற உள்ள தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைந்த கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, மதுரை, திண்டுக்கல், கோவை, ஈரோடு, திருப்பூர், நாமக்கல், கரூர், நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய மாவட்ட மற்றும் இம்மாவட்டங்களில் உள்ள மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நாளை (28-09-2026 திங்கட்கிழமை) காலை 10.00 மணி அளவில் தாராபுரம் தொகுதி தலைமை தேர்தல் பணிமனையில் ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் இராமலிங்கள் அவர்கள் தலைமையிலும் - மாநில நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் - மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, மதுரை, திண்டுக்கல், கோவை, ஈரோடு, திருப்பூர், நாமக்கல், கரூர், நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய மாவட்ட மற்றும் இம் மாவட்டங்களில் உள்ள மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தாராபுரம் (தனி) தொகுதி'டைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளரை ஆதரித்து பிரச்சார உத்திகள் - குறித்து

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சந்தி சிரிக்கும் சட்டம் — ஒழுங்கு!

# செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

## (24.09.2026)

திருவள்ளூர் மாவட்டம் கொட்டையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் காலை உணவு சாப்பிட்ட 40 மாணவ, மாணவியருக்கு வாந்தி மயக்கம்.

உடல்நலக்குறைவு ஏற்பட்ட 40 மாணவ, மாணவிகளும் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதி.

திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாணவ, மாணவிகளின் பெற்றோர் திரண்டதால் பரபரப்பு.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட காலை உணவு சாம்பாரில் பல்லி விழுந்ததாக புகார்.

மதுராந்தகம் அருகே மேலகண்டை ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் காலை உணவு சாப்பிட்ட 11 மாணவர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதி.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட காலை உணவில் பல்லி இருந்ததாக புகார்.

உடல்நலக்குறைவு ஏற்பட்ட 11 மாணவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை.



கடலூர் நெல்லிக்குப்பம் அருகே 2 நாட்களுக்கு முன் காணாமல் போன 2 இளைஞர்கள் சாலை ஓரத்தில் சடலமாக மீட்பு.

நெல்லிக்குப்பம் அருகே உள்ள பி.என்.பாளையம் பகுதியைச் சேர்ந்த 20 வயது சபரிகிரி, அவரது நண்பர் விஷ்யா ஆகியோர் கடந்த 21ஆம் தேதி முதல் மாயம்

கல்லூரி மாணவர் உள்ளிட்ட 2 பேர் மாயமானது குறித்து புகார் அளித்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என உறவினர்கள் குற்றச்சாட்டு.

காவல்துறையின் அலட்சியத்தைக் கண்டித்து உறவினர்கள் சாலை மறியல் போராட்டம்.

போலீசார் உரிய நடவடிக்கை எடுக்காததால் ஆத்திரமடைந்த இருவரது உறவினர்களும் நேற்று மாலை சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்

மாயமான சபரிகிரி, விஷ்வா ஆகியோர் கடலூர் அடுத்த ராமாபுரம் அருகே நெடுஞ்சாலையோரம் உள்ள வாய்க்கால் அருகில் சடலமாகக் கண்டெடுப்பு.

இருவரின் மரணத்திலும் சந்தேகம் இருப்பதாகக் கூறி உறவினர்கள் மற்றும் கிராம மக்கள் நெல்லிக்குப்பம் அருகே மீண்டும் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



"2 இளைஞர்களும் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்களா?" அல்லது கொலையா என போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

செங்கல்பட்டு அடுத்த புலிப்பாக்கம் பகுதியில் வெட்டுக் காயங்களுடன் ஆண் சடலம் மீட்பு.

செங்கல்பட்டு தட்டான்மலை பகுதியைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் படுகொலை செய்யப்பட்டது விசாரணையில் தகவல்.

செங்கல்பட்டில் கடந்த ஒரு வாரத்தில் அடுத்தடுத்து 3 படுகொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதால் மக்கள் அச்சம்.

த.வெ.க. ஆட்சியில் சந்திசிரிக்கும் சட்டம் ஒழுங்கு - கொலை - கொள்ளை உள்ளிட்ட குற்றச்சம்பவங்கள் அதிகரிப்பு.

திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தர்காவிற்கு அரிசி, காய்கறிகள் கொண்டு சென்ற பள்ளிவாசல் நிர்வாகியைத் தடுத்து நிறுத்திய காவல் துறையினர்.

சமைக்கக்கூடிய உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லக்கூடாது என காவல்துறையினர் தெரிவித்ததால் வாக்குவாதம்.

காவல்துறையினரின் நடவடிக்கைக்கு சிக்கந்தர் அவுலியா தர்கா நிர்வாகம் எதிர்ப்பு.



திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள சிக்கந்தர் அவுலியா தர்கா சாவியை, மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து ஒப்படைக்கப் போவதாக தர்கா நிர்வாகம் எச்சரிக்கை.

திருப்பரங்குன்றம் தீபத் தூண் விவகாரத்தில் வாய் திறக்காத விஜய், இந்த விவகாரத்திலாவது வாய் திறப்பாரா?

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு டீசல் ஊற்றி தீக்குளிக்க முயன்ற பட்டதாரி சகோதரர்கள்.

விவசாயிகள் குறைதீர் கூட்டத்திற்கு வந்த பொறியியல் பட்டதாரிகளான ராஜராஜன், ஜெயஸ்ரீராம் ஆகிய இருவரும் தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு.

சொத்தை சிலர் அபகரிக்க முயற்சிப்பதாகவும், அவர்களுக்கு ஆதரவாக காவல்துறையினர் செயல்படுவதாகவும் கூறி தீக்குளிக்க முயன்ற சகோதரர்கள்.

போட்டித் தேர்வுக்குத் தயாராகி வரும் நிலையில், காவல்துறையினர் பல முறை விசாரித்து வருவதால் மன உளைச்சல் ஏற்படுவதாகக் குற்றச்சாட்டு.

சரித்திரப் பதிவேடு குற்றவாளியாக தங்களது பெயரைச் சேர்க்க இருப்பதாக காவல்துறையினர் மிரட்டுவதாகவும் சகோதரர்கள் குற்றச்சாட்டு.



தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி மூலனூர் மேற்கு ஒன்றியம், எரசனாம்பாளையம் ஊராட்சி, நாட்டார் மங்கலம் பகுதியில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கழக கொள்கை பரப்பு இணைச்செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், சென்னிமலை வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.செங்கோட்டையன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் பலர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் ஜன்னத்துல் பிரதோஷ் பள்ளிவாசலில் கழக துணை பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், நெல்லை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., கழக இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ரகு, நகரக் கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், நகர்மன்ற தலைவர் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.